**16.04.2025**

**O.S.No.100/2014**

**வா.சா.1 : சாந்தி**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) பாலுசாமியும், செங்கமலையும் உடன் பிறந்த சகோதர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் மருத கவுண்டரின் மகன்கள் என்றால் சரிதான். நான் பாலுசாமியின் மகள் என்றால் சரிதான். செங்கமலைக்கு வெங்கடேசன் என்ற ஒரு மகன். அவர் இறந்துவிட்டார். வெங்கடேசனும், நானும் சேர்ந்து 17.02.1999ல் ஒரு பாக பத்திரம் எழுதிக்கொண்டோம் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு அவ்வாறு எழுதப்படவில்லை, பதிவு செய்யப்படவில்லை என்று சொல்கிறார்.

2) அவ்வாறு எழுதப்பட்ட பாக பத்திரத்தில் எனக்கு நஞ்சை நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு முள்ளுவாடி கிராமத்தில் ச.எண்கள். 139/2, 139/6, 139/3, 139/4 ல் 2 ஏக்கர் 16 செண்ட் நஞ்சை நிலங்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு பாக பத்திரம் எழுதி ஆத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 359/99 என்று பதிவு செய்யப்பட்டது என்றும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல.

3) எனவே அந்த பாக பத்திரத்தை நான் பொய் என்று சொல்கிறேன். அந்த பாக பத்திரம் அடிப்படையில் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. புதியதாக தான் வழக்கு பதிவு செய்துள்ளேன். அந்த பத்திரத்தில் வெங்கடேசனுக்கு 1 ஏக்கர் 60 செண்ட் மட்டும் புஞ்சை நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் அந்த பாக பத்திரத்தில் இந்த பாக பத்திரம் ஊர்ஜிதம் ஆனது என்றும் வேறு பிரித்து கொள்ள வேண்டி பாக சொத்துக்கள் இல்லை என்றும் மேற்படி பாக பத்திரம் இரத்து

செய்யதக்கது அல்ல என்றும், அவ்வாறு ரத்து செய்தால் செல்லதக்கது அல்ல என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) மேலும் அந்த பத்திரத்தில் எனக்கோ அல்லது வெங்கடேசனோக்கோ வேறு சொத்துக்கள் பாத்தியப்பட்டு இருந்தாலோ அதில் மற்றவர்களுக்கு எவ்வித உரிமையோ பாத்தியமோ பின்தொடர்ச்சி இல்லை என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதே போல ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் அதிகமாகவோ குறைவாகவோ அதை பொறுத்து பின்னிட்டு உரிமை கோர முடியாது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5) நான் வழக்கு தாக்கல் செய்தும் போது என் குடும்பத்திற்கு சம்பந்தம் இல்லா சர்வே எண்களில் உள்ள சொத்துக்களை தாவாவில் முதலில் குறிப்பிட்டுவட்டு பின்னிட்டு பதிலுரை தாக்கல் செய்த பின்னிட்டு அதனை நீக்கிவிட்டேன் என்றால் சரியல்ல (IA 3/2024). அதில் உள்ள வீட்டு மனை கிராம நத்தம் என்றால் சரிதான். தாவா 2 வது அயிட்ட சொத்து அரசாங்கம் நேரடியாக செங்கமலைக்கு பட்டா கொடுத்த சொத்து என்றும், செங்கமலைக்கு பின்னிட்டு அவரின் வாரிசுகளான பிரதிவாதிகள் முழு உரிமையுடன் குடியிருந்து வரும் சொத்து என்றால் சரியல்ல.

6) தாவா 1 வது அயிட்ட சொத்தில் ச.எண். 163/6 ல் உள்ள 15 செண்டும் செங்கமலைக்கு தானமாக வழங்கப்பட்ட சொத்து என்றும், அதில் எனக்கு பாகம் கோர உரிமை இல்லை என்றால் சரியல்ல. அது போல தாவா 1 வது அயிட்ட சொத்தில் ச.எண். 163/4 ல் 2 ஏக்கர் 37 செண்ட் செங்கமலைக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், அதிலும் எனக்கு பாகம் கோர உரிமை இல்லை என்றால் சரியல்ல.

7) 1999 ல் நானும், வெங்கடேசனும் பாக பிரிவினை எழுதிக்கொண்டு தனி தனியாக சென்றுவிட்ட நிலையில் பின்னிட்டு 25.03.2010 ல் வெங்கடேசனின் வாரிசுகளான 1, 2 பிரதிவாதிகள் அவர்களிடையே பாக பிரிவினை ஏற்படுத்தியுள்ளதில் 11 ஆண்டுகள் கழித்து நான் அதை ஆட்சேபிக்க எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அவர்கள் பாக பத்திரம் எழுதிக்கொண்டதே இன்று வரை தெரியாது. எனவே நான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமையே இல்லை என்றால் சரியல்ல. நான் பாகம் செய்து கொண்டதை மறைத்தும், அவர்கள் பாகம் செய்து கொண்டதை மறைத்தும் நான் பொய்யாக தாக்கல் செய்துள்ள பாக பிரிவினை வழக்கு செல்லாது என்றால் சரியல்ல. எனக்கு 5 ஏக்கர் நிலம் பாகம் வேண்டும்.

8) தாவா சொத்து முழுவதும் 1,2 பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அதை பொறுத்து விற்கிரய வில்லங்கள் செய்யக்கூடாது என்றும், அவர்கள் மீத எனக்கு பரிகாரம் கோர எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய பாக பத்திரமும் 1999 ல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது, பிரதிவாதிகள் எழுதிக்கொண்ட 2010 ல் பாக பத்தரமும் நடைமுறைபடுத்தப்பட்டுளளது என்றும், எனவே நான் பாக கோர முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பெயரில் தான் பட்டா, சிட்டா உள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

9) நான் தாவாவில் கோரப்படாத பரிகாரம் ஆன 2010 ல் பிரதிவாதிகள் எழுதிக்கொண்ட பாக பிரிவினை பத்திரம் செல்லாது என்று பிரமாண பத்திரத்தில் கோரியுள்ள விவரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து, உண்மையான வழக்கு மூலமும் முகாந்திரமும் இல்லாமல் தாக்கல்

செய்துள்ள வழக்கு என்பதால் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.04.16 18:44:05 +0530

**Subordinate Judge, Attur.**